OS: 509/2018

Date: 22.09.2025

பெயர் : மணி **(பி.வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**</u>

1. எனது பதில் உரையில் 1974ம் வருடத்திற்கு முன்பே ஓமலூர் டவுன் பஞ்சாயத்தின் வழக்கு சொத்து ரோடு என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்று நான் குறிப்பிட்டு கூறியிருக்கும் நிலையில் அதுசம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். 07.08.2019ம் தேதியன்று நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதில் உரையில் தாவாவில் 3வது பாராவில் கண்டுள்ள சங்கதிகளின்படி கோவில் நிலத்தை வீட்டு மனைகளாக விற்கபட்டது என்பது சரியானது ஆகும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அங்கியிருப்பவர்கள் சொன்னதால் அதனை என் வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர் எழுதியிருக்கிறார்.

2. தாவா சொத்தின் பட்டா கோவில் பெயரில் உள்ளதாக கூடுதல் பதில் உரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் 20 வருடம் ஆகிவிட்டது எனக்கு நினைவில்லை. வழக்கு விசாரணையின் ஆரம்பத்திலிருந்தே நானும், இதர பிரதிவாதிகளும் வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வரும்போது ஆஜரில் இருந்தோம் என்றால் ஆமாம். வாதிகள் அருள்மிகு ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் அறங்காவலர்களாக இருந்து தாவாவை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதற்கு வா.சா.ஆ.12, 13, 14 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால் இருக்கலாம்.

3. எனது கூடுதல் பதில் உரையின் 3வது பாராவில் கந்தசாமி கவுண்டர் திருமண மண்டபம் மற்றும் தங்கம் தியேட்டர் முன்பு தென்வடலாக வண்டி பாதையானது புது தெருவில் உள்ள குடியிருப்புகளை சென்று அடைகிறது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த வண்டி பாதை 25 அடியிலிருந்து 30 அடிக்குள் இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை ஆனால் பாதை இருக்கிறது. அளவு சரியாக எனக்கு தெரியவில்லை. வண்டி தடமானது ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து புதுதெருவை சென்றடைகிறது என்றால் ஆமாம்.

4. தாவா சொத்திற்கு சேர்ந்தார் போல் வீடுகள்தான் இருக்கிறது என்றாலும், விவசாய நிலங்கள் இல்லை என்றாலும் ஆமாம். தற்போது லிங்கம்மாள் என்பவரின் பட்டா நிலம் தான் வீட்டுமனையாகிவிட்டது. ஆரம்பத்தில் விவசாய நிலமாகதான் இருந்தது. பொதுமக்கள் தாவா சொத்தை வண்டி தடமாக பல ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லியிருக்கும் நிலையில் அதற்கு ஏதாவது ஆவணம் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் ஆவணம் ஒப்படைக்கவில்லை. கண்ணால் பார்த்ததைதான் சொல்கிறேன்.

5. எனது முதல் விசாரணையின் 5வது பாராவில் இந்த வழக்கின் வாதிகளின் கெட்ட எண்ணத்தை தெரிந்து கொண்ட நாங்கள் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.252/2007 என்ற எண்ணில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் எனக்கு நினைவில்லை. 20 வருடம் ஆகிவிட்டது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மேற்படி வழக்கில் 1 முதல் 5 வாதிகள் மீது வாதி கோவிலின் Representative Managing trustee என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால்

சொல்லியிருக்கலாம் எனக்கு நினைவில்லை.

6. எனக்கு மேற்கண்ட விபரம் தெரியும் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் பிரதிவாதிகள் பதில் உரை தாக்கல் செய்திருப்பதும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் கோவில் மீது இந்த வழக்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கு தாக்கல்செய்த 2 மாதத்தில் வாதிகள் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டதால் வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.81/1Nல் உள்ள பொது பாதை ஒன்றுதான் எங்களுக்குரிய நிலத்தை அடைவதற்காக ஒரே வழி என்று தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வழக்கு சொத்து தனி நபருக்கு பாத்தியப்பட்டது என்று வா.சா.ஆ.1யை எங்கள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தியிருக்கும் நிலையில் அந்த தனி நபர் யார் என்று சொல்ல முடியுமா என்றால் இதை என் வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். நான் வழக்கு சொத்து தனி நபருக்கு பாத்தியப்பட்டதுஎன்று சொல்லவில்லை. பொது தடம் என்றும் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றுதான் சொல்கிறேன்.

8. 1, 2 பிரதிவாதிகளாகிய நாங்கள் எங்கள் சொத்திற்கு தருமபுரி மெயின் ரோட்டில் இருந்தே சென்றுவிடலாம் என்றால் வழி இருக்கிறது. 3, 4 பிரதிவாதிகள் அவர்களது மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் தருமபுரி மெயின் ரோட்டிலிருந்தே சென்றுவிடலாம் என்றால் அதை அவர்களிடம் தான் கேட்கவேண்டும். வழக்கு சொத்திற்கு பிரதிவாதிகளாகிய நாங்கள் பாத்தியம் கோரியதால் தான் வாதிகளுக்கு

இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் நாங்கள் பாத்தியம் கோரவில்லை அது பொது தடம் என்றுதான் சொல்கிறோம்.

9. எனது முதல் விசாரணையிலும், பதில் உரையிலும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினரான ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியை சேர்க்கவில்லை என்பதால் இந்தவழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள 252/2007 வழக்கில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி பதில் உரை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் எனக்கு நினைவில்லை.

10. அந்த வழக்கில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் உரையில் தாங்கள் இந்த வழக்கில் அவசியம் இல்லாத தரப்பினர் என்றும் தங்களை தேவையில்லாமல் கெட்ட எண்ணத்தில் மேற்படி அவ.எண்.252/2007 வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள் என்றால் எனக்கு சரியாக நினைவில்லை.

11. நான் வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வியாஜிதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் சர்வே எண் 81 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டு 81/1Nஆக மாற்றப்பட்டது என்பதற்கு வாதிகள் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் நினைவில்லை.

12. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்கண்ட விவரம் பதிவாகியிருக்கிறது என்றால் சரியல்ல.

வழக்கு சொத்திற்கு வடமேற்கில் 3 அடி அகலத்தில் 10 அடி நீளத்திற்கு இரும்பு ஆங்கிள் வைத்து சட்ட விரோதமாக அத்துமீறி நீட்டி கட்டியதனால் வாதிகள் உங்களுக்கும் 2ம் பிரதிவாதிக்கும் தந்தி மூலமாக அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் ஆமாம்.

13. அதையும் மீறி நான் கட்டிடம் கட்டியதால் வாதிகள் ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.22 என்றால் புகார் கொடுத்தார்கள். தாவா பி அயிட்ட சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறேன் என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் ஆமாம். அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம்.

14. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்தை 3 அடி அகலத்தில் 10 அடி நீளத்திற்கு ஆக்கிரமித்து ஆங்கிள் வைத்து கட்டடப்பட்டிருப்பது தெரிகிறது என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.3 புகைப்படத்தில் உள்ளதை நான் மறுக்கிறேன் என்றாலும் ஆமாம். நான் வழக்கு சொத்தை ஓமலூர் பஞ்சாயத்து போர்ட்டிற்கு பாதை பயன்பாட்டிற்காக தான பத்திரம் மூலமாகவோ அல்லது வேறு பத்திரம் மூலமகவோ ஒப்படைத்தற்காக ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் 50, 100 வருடங்களுக்கு முன்பு இருந்ததாக சொல்கிறார்கள். அந்த ஆவணம் இருந்தால் இந்த வழக்கேகிடையாது என்று சாட்சி கூறுகிறார். நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றாலும் சரியல்ல.

15. வழக்கு சொத்தின் வடபுறம் குமரன் எலக்ட்ரிக்கல்ஸ் சுவரின் ஓரமாக சுமார் ¾ அடி அகலத்தில் ½ அடி உயரத்தில், 50 அடி நீளத்திற்கு சிமெண்ட் மேடை அமைக்கப்பட்டிருந்ததாக ஆணையர் அவரது அறிக்கையில்

குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார் என்றால் இருக்கலாம் நாங்கள் அந்த சிமெண்ட் மேடை போடவில்லை. எங்களுக்கு விற்றவர்களே போட்டிருந்தார்கள். அது 1989ம் ஆண்டில் அதை கட்டியவரே அதனை படிகட்டாக வைத்து கட்டினார்.

16. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்படி சிமெண்ட் மேடை போடப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சுமார் 10 அடி உயரத்தில் குமரன் எலக்ட்ரிக்கல்ஸ் என்ற போர்ட் மாட்டியிருக்கிறோம் என்றால் எங்கள் சொத்தில் மாட்டியிருக்கிறோம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கு சொத்தை ஆக்கிரமித்து மாட்டியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

17. ஆணையர் அவரது அறிக்கையில் வழக்கு சொத்தில் வடமேற்கில் சுமார் 2 ½ அடி அகலத்தில் 20 அடி நீளத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து பால்கனி அமைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல. குமரன் எலக்ட்ரிக்கல்ஸ் தார்சு கட்டிடத்திற்கு பின்புறம் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு ஆங்காங்கே பி.வி.சி. பைப் பொருத்தப்பட்டிருப்பதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல.

18. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 3 வது பாராவில் தாவா சொத்து காலியிடம் என்று வாதிகள் சொல்வது முற்றிலும் பொய் என்று குறிப்பிட்டு கூறியிருக்கிறேன் என்றால் ஆமாம் அது பொது தடம் என்று சொல்கிறேன். நான் அந்த வழக்கு சொத்தை தடம் என்று சொல்லும் நிலையில் அது கான்கிரீட் ரோடா அல்லது தார் ரோடா என்றால் மண் ரோடு ஆகும்.

நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அது காலியிடம் என்றாலும் சரியல்ல. நான் வழக்குரையின் பாரா 3ல் சொல்லியுள்ள படி 81/1 மனை நிலங்களுக்கு பின்புறம் அதாவது கிழபுறம் கோவில் நிலம் வீட்டு மனைகளாக விற்கபட்டுள்ளது என்று சொல்லியிருக்கும் நிலையில் அதனை காட்ட ஆவணம் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் இல்லை.

19. சர்வே எண்.81/1க்கு பின்புறம் கோவில் நிலம் எதுவும் விற்கபடவில்லை. தாவா காலி நிலத்தை கோவில் தர்மகர்த்தாக்கள் யாரேனும் பஞ்சாயத்து போர்ட்டிற்கு ரோடு பயன்பாட்டிற்காக தான பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லும் நிலையில் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

20. நான் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து துர்லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்தை பாதை என்று சொல்லி பொய்யாக எதிர் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.